விஜயதசமி

பள்ளி மாணவர்களுக்கு வித்யாரம்பம்



மயிலாடுதுறை, அக். 20: தருமபுரம் ஆதீனத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்வில், குருமகாசந்நிதானம் குழந்தைகளின் நாக்கில் மயிலிறகால் தேன் தடவி, நெல்லில் அகரம் எழுத வைத்து கல்வியை தொடங்கிவைத்தார்.

மயிலாடுதுறை தருமபுரம் ஆதீன வளாகத்தில் உள்ள தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீகுருஞானசம்பந்தர் மழலையர் பள்ளியில் விஜயதசமியையொட்டி புதிதாக சேர்ந்த மாணவர்களுக்கு வித்யாரம்பம் நடைபெற்றது.

இப்பள்ளியில் புதிதாக சேர்ந்த குழந்தைகளை பள்ளி தலைமையாசிரியர் ஜி.வெங்கடேசன் தலைமையில் ஆசிரியர்கள் மேள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக தருமபுரம் ஆதீனத்திருமடத்துக்கு அழைத்து வந்தனர். அங்கு, சொக்கநாதர் பூஜை மடத்தில் நடைபெற்ற நிகழ்வில், தருமபுரம் ஆதீனம் 27-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீமாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குழந்தைகளின் நாக்கில் மயிலிறகால் தேன் தடவி நெல்லில் அகரம் எழுத வைத்து அத்தியாபியாசம் எனும் ஆரம்பக் கல்வியை தொடக்கி வைத்து, இனிப்பு வழங்கி அருளாசி (படம்) வழங்கினார்.

இதேபோல், மயிலாடுதுறை டார்கெட் சில்வர் ஜூப்ளி மெட்ரிக் பள்ளியில் பள்ளித் தலைவர் மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில், சரஸ்வதி தேவிக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனை செய்யப்பட்டு, பள்ளியில் புதிதாக சேர்க்கைக்கு வந்த குழந்தைகளை பெற்றோருடன் அமரவைத்து, மாலை, திலகம் அணிவித்து, நெல்லில் அகரம் எழுதச்செய்து, ஆரம்பகல்வியை ஆசிரியர் தொடங்கிவைத்தனர்.

தருமபுரம் அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கை கோயிலில் சதசண்டி யாகம் பூர்த்தி

மயிலாடுதுறை, அக். 20: தருமபுரம் ஆதீனத்தில் உள்ள அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கை அம்மன் கோயிலில் நடைபெற்ற 76-ஆம் ஆண்டு சதசண்டி மஹா ஹோமத்தின் நிறைவில் செவ்வாய்க்கிழமை கலசாபிஷேகம் நடைபெற்றது.

மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனத்திருமடத்தில் அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கை அம்மன் சன்னதியில் நவராத்திரி பெருவிழாவையொட்டி அக்.11-ம் தேதி தொடங்கி பத்து நாள்களாக துர்க்கைக்கு சதசண்டி ஹோமமும், நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றது.

இதன் நிறைவு நாளான செவ்வாய்க்கிழமை சண்டி யாகம் மகா பூர்ணாகுதியுடன் நடைபெற்றது. தொடர்ந்து, யாககுண்டத்தில் கலசத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட புனிதநீர் புறப்பாடு செய்யப்பட்டு, அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கை அம்மனுக்கு கலசாபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் தருமபுரம் ஆதீனம் 27-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு கலசாபிஷேகம் நடைபெற்றது.

அம்பு போடும் நிகழ்வு...



சரஸ்வதி பூஜையை முன்னிட்டு, நாகை மாவட்டம் தேவூர் தேவபுரீஸ்வரர் கோயிலில் இருந்து சிறப்பு அலங்காரத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி, பசுபதீஸ்வரர் கோயிலில் அம்பு போடும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சீரடி சாய்பாபா கோயில் கும்பாபிஷேக 8-ஆம் ஆண்டு நிறைவு விழா



தரங்கம்பாடி, அக். 20: திருக்கடையூரில் ஸ்ரீசீரடி சாய்பாபாவின் 108-ஆவது சமாதி நாள் மற்றும் அமிர்தசாய் தியான பீடத்தின் 8-ஆண்டு கும்பாபிஷேக நிறைவு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி, சந்தனம் , பன்னீர் மற்றும் வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து பழவகைகள் இனிப்புகள் மற்றும் மலர் அலங்காரம் செய்யப்பட்டு சுவாமிக்கு தீபாராதனை காட்டப்பட்டது.

கூத்தனூர் கோயிலில் வித்யாரம்பம்



கூத்தனூர் சரஸ்வதி கோயிலில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சி. (உள்படம்) வெள்ளை பட்டு உடுத்தி சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த சரஸ்வதிதேவி.

நன்னிலம், அக். 20 : கூத்தனூர் சரஸ்வதி கோயிலில் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை சரஸ்வதி பூஜை மற்றும் விஜயதசமி வழிபாடு நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம் பூந்தோட்டம் அருகில் உள்ள கூத்தனூரில் சரஸ்வதி தனி கோயிலில் அருள்பாலித்து வருகிறார். இத்தலத்தின் மூலவராக சரஸ்வதி விளங்குகிறார்.

வெண்மை நிற ஆடையில், வெண் தாமரையில் பத்மாசனத்தில் வலது கீழ் கையில் சின்முத்திரையும், இடது கையில் புத்தகமும், வலது மேல் கையில் அட்சரமாலையும், இடது மேல் கையில் அமிர்த கலசமும் தாங்கி அமர்ந்த கோலத்தில் அருள்பாலித்து வருகிறார்.

விஜயதசமியை முன்னிட்டு, இக்கோயிலில் சாரதா நவராத்திரி விழா 12 நாட்களும், பின்னர் பத்து நாட்கள் ஊஞ்சல் உற்சவம் ஆகியவை நடைபெற்றன. விழா நாள்களில் சரஸ்வதிதேவி சந்தனக் காப்பு, மஞ்சள், காப்பு, புஷ்ப அலங்காரம் என்று பல்வேறு அலங்காரங்களில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

வித்யாரம்பம்: இக்கோயிலில் விஜயதசமியன்று வித்யாரம்பம் நடைபெறுவது வழக்கம். இந்த நாளில் சரஸ்வதியின் சந்நிதியில் நெல்மணிகளின் நிரப்பப்பட்ட தட்டின் நடுவே தமிழ் எழுத்தின் முதல் எழுத்தான 'அ' வை எழுத வைத்து குழந்தைகளின் கல்வியை பெற்றோர்கள் தொடங்குவது வழக்கம்.

இதன்படி, கூத்தனூர் சரஸ்வதி கோயிலில் செவ்வாய்க்கிழமை திரளான பக்தர்கள் தங்கள் குழந்தைகளை நெல்மணிகள் நிரப்பப்பட்ட தட்டில் தமிழின் முதல் எழுத்தை எழுத வைத்து, தங்கள் குழந்தைகளின் கல்வியைத் தொடங்கினர்.

திருமேனிகூடம் வரதராஜ பெருமாள் கோயில் யாகசாலை பூஜைகள் நாளை தொடக்கம்

பூம்புகார், அக். 20: திருமேனிகூடம் வரதராஜ பெருமாள் கோயிலில் கும்பாபிஷேகத்துக்கான யாகசாலை பூஜைகள் வியாழக்கிழமை தொடங்குகின்றன.

திருவெண்காடு அருகே திருமேனிகூடம் பகுதியில் வரதராஜ பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயில் 108 வைணவ திவ்ய தேச பெருமாள் கோயில்களில் ஒன்றாகும். இங்குள்ள பெருமாள் மீது திருமங்கையாழ்வார் உள்ளிட்ட பல்வேறு ஆழ்வார்கள் பாசுரங்கள் பாடியுள்ளனர். பல்வேறு சிறப்புகளை கொண்ட இக்கோயிலின் திருப்பணி 7 கோயில் ஆதீன கர்த்த நிர்வாகி வேதராஜன் ஏற்பாட்டில் வரும் 25-ஆம் தேதி நடைபெறுகிறது. இதையொட்டி யாகசாலை பூஜைகள் வியாழக்கிழமை தொடங்குகின்றன. பூஜ்ஜிய ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள், சுதா எம்.பி., செந்தில்செல்வன் எம்எல்ஏ, நாங்கூர் பொது நல சங்கத் தலைவர் அன்பு, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஆனந்தன் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

பனை விதைகள் நடவு பணி குறித்த ஆலோசனைக் கூட்டம்



தரங்கம்பாடி, அக். 20: தரங்கம்பாடி கடற்கரை பகுதியில் லயன்ஸ் சங்கங்கள் மற்றும் புவி காப்பு அறக்கட்டளை இணைந்து ஒரு கோடி பனை விதைகள் நடவு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பேரூராட்சி துணைத் தலைவர் பொன் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், புவி காப்பு அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் மா. ரமேஷ், லயன்ஸ் சங்க நிர்வாகிகள் பழனி வேந்தன்,ராஜராஜன், சந்துரு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் அக்.23-ஆம் தேதி தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை கடற்கரை பகுதியில் பனை விதைகள் நடும் பணி தொடக்க விழாவுக்கு தமிழக அமைச்சர் பி. வெங்கடரமணன், மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த் , எம். எல்.ஏ. நிவேதா முருகன் உள்ளிட்டோரை அழைக்க முடிவெடுக்கப் பட்டது.

சத்குரு சாய்பாபா கோயிலில் சிறப்பு வழிபாடு

சீர்காழி, அக். 20: சீர்காழி தென்பாதியின் சத்குரு சாய்பாபா தியான ஆலயம் உள்ளது. இங்கு விஜயதசமியை முன்னிட்டு சாய்பாபாவிற்கு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. முன்னதாக கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், மிருத்யுஞ்ய ஹோமமும், தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது.

மது ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்

திருமருகல், அக். 20: திருமருகல் அருகே பனங்காட்டூரில் மது ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் அண்மையில் நடைபெற்றது.

கொத்தமங்கலம், பனங்காட்டூர் கிராமப் பகுதிகளை ஒட்டி புதுச்சேரி மாநில மதுபானக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் மதுப்பழக்கத்துக்கு அடிமையாகி உயிரிழப்புகள் தொடர்கின்றன. இதை தடுக்க பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பனங்காட்டூர், கொத்தமங்கலம் கிராம இளைஞர்கள் இணைந்து இந்த மாரத்தான் ஓட்டத்தை நடத்தினர்.

போட்டிக்கு முன்னதாக, மது ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது. இதில் 100-க்கும் மேற்பட்ட சிறுவர்கள், இளைஞர்கள் பங்கேற்றனர். போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு: பெண் காவலர் உள்பட இருவர் பணியிட மாற்றம்

நாகப்பட்டினம், அக். 20: நாகை அருகே மெத்தம்பெட்டமைன் போதைப் பொருளை பதுக்கிய சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்ததாக கூறப்படும் பெண் காவலர், டிஎஸ்பியின் கார் ஓட்டுநர் ஆகிய இருவர் செவ்வாய்க்கிழமை பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

நாகை அருகே மெத்தம்பெட்டமைன் போதைப் பொருளை பதுக்கிவைத்து இலங்கைக்கு கடத்த திட்டமிட்டது தொடர்பாக, திருப்பூண்டியை அடுத்த சிந்தாமணி கிராமத்தைச் சேர்ந்த தவெக மாவட்ட செயற்குழு உறுப்பினர் பூபாலன் உள்ளிட்ட நால்வர் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.



சிவகுமார் , சங்கீதா.

மேலும், போதைப் பொருள் கடத்தல் சம்பவத்துக்கு கார் வழங்கியதாகக் கூறப்படும் பிரதாபராமபுரம் பகுதியைச் சேர்ந்த ராஜ்குமாருக்கு மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நேரில் ஆஜராக அழைப்பாணை பிறப்பித்துள்ளனர்.

இதற்கிடையே, குற்றவாளிகளில் ஒருவரான சுகன் நடத்திவரும் விடுதியில் வருவாய் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர். இதில், குற்றவாளிகளுடன் காவல்துறையைச் சேர்ந்த சிலர் தொடர்பில் இருந்தது தெரிய வந்தது. வேளாங்கண்ணி துணைக் காவல் கண்காணிப்பாளரின் ஓட்டுநர் சிவகுமார், வேளாங்கண்ணி காவல்நிலைய பெண் காவலர் சங்கீதா ஆகியோரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதன்அடிப்படையில், சிவகுமார் , சங்கீதா இருவரையும் தஞ்சாவூருக்கு பணியிட மாற்றம் செய்து, நாகை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கேல்கர் சுப்ரமண்ய பாலச்சந்திரா செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

மெத்தம்பெட்டமைன் பதுக்கிய சம்பவம்: மேலும் ஒருவருக்கு அழைப்பாணை

நாகப்பட்டினம், அக். 20: நாகை அருகே 135 கிலோ மெத்தம்பெட்டமைனை பதுக்கிய சம்பவம் தொடர்பாக, மேலும் ஒருவர் வீட்டில் திங்கள்கிழமை இரவு சோதனை நடத்திய மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள், அவரை நேரில் ஆஜராகமாறு அழைப்பாணை பிறப்பித்துள்ளனர்.

நாகையிலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கிவைத்திருந்த 135 கிலோ மெத்தம்பெட்டமைன் போதைப் பொருளை கடந்த அக்.16-ஆம் தேதி மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தவெக நிர்வாகியான திருப்பூண்டி, கீழபிடாகையைச் சேர்ந்த என். பூபாலன் (42), பிரதாபராமபுரம், செட்டித் தெருவைச் சேர்ந்த சுகன் (27) , மணிகண்டன் (39), சதீஷ்குமார் (30) ஆகிய நால்வர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்களுடன் இணைந்து வேளாங்கண்ணியில் தனியார் விடுதியை குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் பிரதாபராமபுரம், வடக்கு தெருவைச் சேர்ந்த ராஜ்குமார் (38) என்பவர் வீட்டில் வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் திங்கள்கிழமை இரவு 2 மணி நேரம் சோதனை நடத்தினர். மேலும், வீட்டிலிருந்த ராஜ்குமாரின் மனைவியிடம் விசாரணை மேற்கொண்டனர்.

சோதனையின்போது வீட்டில் இல்லாத ராஜ்குமாரை வரும் 23-ஆம் தேதி திருச்சியில் உள்ள மத்திய வருவாய் புலனாய்வு அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக அறிவுறுத்தி அழைப்பாணை பிறப்பித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கெனவே தவெக நிர்வாகி உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் ராஜ்குமாருக்கு சொந்தமானது எனக் கூறப்படுவதால், இந்த வழக்கில் இவரும் குற்றவாளியாக சேர்க்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

சீரடி சாய்பாபாவுக்கு புஷ்பாஞ்சலி



மயிலாடுதுறை, அக். 20: மயிலாடுதுறை நீதிமன்றசாலையில் உள்ள சாய் சட்டக்குழும வளாகத்தில் எழுந்தருளியுள்ள குபேர சாய்பாபாவுக்கு, சீரடி சாய்பாபா சமாதி தினத்தையொட்டி மல்லிகை, முல்லை, அரளி, ரோஜா, சம்பங்கி, செவ்வந்தி உள்ளிட்ட வாசனை மலர்களால் புஷ்பாஞ்சலி திருவிழா நடைபெற்றது. ஏற்பாடுகளை வழக்குரைஞர் ராம.சேயோன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

மின்னல் பாய்ந்து இருவர் காயம்

சீர்காழி, அக். 20: சீர்காழி உள்ளிட்ட பகுதிகளில் திங்கள்கிழமை இரவு பலத்த இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

அப்போது, நிம்மேலி வடக்குத் தெரு பகுதியில் பலமான இடிச்சத்தம் கேட்டது. இதில், வீட்டில் இருந்த செல்வக்குமார் (24), அதே தெருவை சேர்ந்த செல்வபாரதி (22) ஆகியோருக்கு மின்னல் பாய்ந்ததில் மின்சாரம் பாய்ந்தது போன்று துடிப்பு ஏற்பட்டு கைகால்கள், மறத்துபோனதால் அதிர்ச்சியில் மயங்கி விழுந்தனர். இதையடுத்து, அவர்கள் சீர்காழி அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

ஊரக வாழ்வாதார இயக்கப் பணியாளர்களை பணிநிரந்தரம் செய்ய வலியுறுத்தல்



நாகப்பட்டினம், அக். 20: தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கப் பணியாளர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

வேளாங்கண்ணியில் அந்த இயக்கப் பணியாளர் சங்க மாநிலப் பொதுக்குழுக் கூட்டம், அதன் மாநில தலைவர் பி. ஜெகதீஸ்வரி தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கீழ்வேளூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் டி. லதா, முன்னாள் உறுப்பினர் நாகை மாலி, புதுவாழ்வுத் திட்ட மாநிலத் தலைவர் ஆர். தமிழரசு, ஊரக வாழ்வாதார திட்ட அனைத்து பணியாளர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் எஸ். மணிவண்ணன், பொருளாளர் பி. செல்வசுந்தரி, சிஐடியு மாநிலப் பொதுச் செயலாளர் எஸ். கண்ணன், மாநிலச் செயலாளர் ஆர். லெனின், நாகை மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். ராஜேந்திரன் உள்ளிட்டோர் பேசினர்.

கூட்டத்தில், 5 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றும் ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்ய வேண்டும், காலமுறை ஊதியம், ஊதிய உயர்வு, பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும், உயிரிழந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு ரூ. 25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும், திருவள்ளூர் மாவட்டத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட 3 ஊழியர்களுக்கு மீண்டும் பணி வழங்க வலியுறுத்தி வரும் அக். 26-ஆம் தேதி மாநில அளவிலான போராட்டம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநிலத் துணைத் தலைவர் எஸ். இளஞ்சேரன் வரவேற்றார். நாகை மாவட்ட சங்கத் தலைவர் எம்.கே. தங்கமணி நன்றி கூறினார்.

சாலையை சீரமைக்கக் கோரிக்கை

திருக்குவளை,அக்.20: கீழையூர் ஊராட்சிக்கு உட்பட்ட சிவன் மேல வீதி சாலை மழை காரணமாக கடுமையாக சேதமடைந்து குண்டும் குழியுமாக காட்சியளிப்பதால் பொதுமக்கள் மற்றும் மகன் ஓட்டிகள் கடும் சிரமத்தில் காலாகி வருகின்றனர்

கீழையூர் ஊராட்சிக்குள்பட்ட சிவன் மேலவீதி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் 250-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கின்றனர். இப்பகுதி மக்கள் கீழையூர் கிழக்கு கடற்கரைச் சாலையில் இருந்து வாழக்கரை செல்லும் பிரதான சாலையைப் பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில், இச்சாலை மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. இதனால், பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

தற்போது, பெய்யும் மழையால் சாலையில் உள்ள பள்ளங்களில் மழை நீர் தேங்கி பள்ளங்கள் தெரியாமல் இருசக்கர வாகனங்களில் செல்வோர் மட்டுமின்றி அன்றாடப் பணிகளுக்காக வெளியே சென்று வரும் பொதுமக்களும், பள்ளி, கல்லூரிகளுக்கு சென்றுவரும் மாணவர்களும் கடுமையாக பாதிக்கின்றனர். மழைக் காலங்களில் பயணிப்பது சவாலாக உள்ளது.

இதுகுறித்து, அப்பகுதி மக்கள் கூறியது: இந்த மோசமான சாலையில் மக்கள் பயணிக்க முடியாத வகையில் சிரமமப்படுகிறோம்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு செய்து, சேதமடைந்த சாலையைப் போர்க்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டும். மழை நீர் தேங்காத வகையில் உரிய வடிகால் வசதிகளையும் ஏற்படுத்தித வேண்டும் என்றனர்.

